

ஓலை 189| ஓசை 312| ஆகஸ்ட் 2026

அகர முதல இலக்கியப் பேரவை



கவிஞர் மு. மேத்தா

கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்...

அகர முதல இலக்கியப் பேரவை [ம] சிவம் அறக்கட்டளை



திருக்குறள்

குறள்

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்

பொருள்

நீதி நெறி தவறாமல் ஆட்சி செய்து, தன் நாட்டு மக்களைப் பாதுகாக்கும் ஆட்சியாளன், மக்களுக்குக் கடவுளுக்குச் சமமாகக் கருதிப் போற்றப்படுவான்.

அகர முதல இலக்கியப் பேரவையில் இணைய

9597887847

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com



நிறுவனர்

செல்வமுத்துகுமரன்
குணசேகரசிவம்

ஆசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

வடிவமைப்பு

ச.சூர்யா, அ.வில்சன்

அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர்,
டவுன்ஸ்டேஷன் தென்புறம்,
மயிலாடுதுறை-609001.

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

தன்மானம் காக்கும் தமிழ்!

பாவகை : தனிச்சொல் பெற்ற பதின்சீர் மண்டிலம்

ஊருலகம் சுற்றிடினும் உயர்கல்வி கற்றிடினும்
உலகமொழி பேசிடினும் தமிழா - உன்
ஊன்வளர்க்க உதவுமன்றி தமிழ்போல்
பேருபுகழ் ஈந்திடாது பண்பாட்டை ஊட்டாது
பாரினிலுன் தன்மானம் காக்க - தமிழா
போரிடுவாய் பகைமையினைப் போக்க!



வானத்தை நீக்கிவிட்டு வெண்ணிலவுக் கதிரவனின்
வடிவத்தைக் காண்பதற்கே ஆகுமோ? இதுபோல்,
வளத்தமிழைப் புறக்கணித்தால் வாழுமோ?
மானமின்றி தாய்த்தமிழின் உணர்வின்றி பிழைப்பதாலே
மறத்தமிழ இனமாநீ என்று - ஐயம்
மலையளவு வளர்ந்ததடா இன்று!

வெண்ணிலவுத் தாரகைகள் இல்லாத இரவாக
வெய்யோனு மில்லாத பகலாய் - நீயும்
வளத்தமிழும் இலாவிட்டால் பதராய்,
மண்ணுக்கும் உதவாத பிணமாய்நீ இருந்தாலும்
வண்டமிழே தன்மானம் காக்கும் - என்று
மாறாதா தமிழாஉன் போக்கும்!



நம்முடைய மொழிஇனத்து விழுமியங்கள் பாழாகி
நம்முடைய பண்பாடு, ஒழுக்கம் - அழிந்து
நம்கண்முன் புதைவதாஉன் விருப்பம்?
எம்மொழியாம் தமிழ்க்காத்து வரலாற்றை நிலைநிறுத்து;
எந்நாளும் தன்மானம் காக்கும் - தமிழ்
இன்றேநீ தமிழ்ப்பகையைப் போக்கு(ம்)!
நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

நெருப்பலைப் பாவலர் இராம. இளங்கோவன்

பாவகை : பஃறொடை வெண்பா

வேடிக்கை மாந்தரல்ல
வீறுதமிழ் மக்கள்யாம்

அன்பை நிறைத்தே
அருளுடன் வாழ்வரே
கன்னல் மொழியைக்
களிப்புடன் ஏத்துவர்.

இன்னல் விரட்ட
இதமாய் உழைப்பரே
இன்பத்தில் துள்ளார்
இடறில் வருந்தார்

இன்னலம் வேட்டிட
இன்னாமை ஆற்றாரே
இன்னிசை கேட்டிட
இன்னினி ஆடுவர்.

உன்னதம் பெற்றிட
உந்துதல் செய்வராம்
உன்னமனம் கொண்டே
உதவி புரிவராம்.

நன்னெறி வேட்டே
நயமுடன் பேசுவர்
நன்றி மறவாமல்
நாளும் ஒழுகுவர்.



தன்மை நிறைத்தே
தளர்வின்றி ஏகியே
தன்னை அறியும் தலை.

கவிஞர் செ. கலைவாணி

அழைக்காமலே
வாசல் வருகிறது.
பூவின் வாசம்.

பலதரப் பூக்கள்
ஒன்றாய்ப் பவனி.
பல்லக்கில்.

கூந்தலிலிருந்து விழுந்த பூ
அழகாய்ச் சூடிக்கொண்டது
ஒற்றையடிப்பாதை.

நிலமகளின்
சலங்கையொலி
நீரோடையில் சலசலப்பு.



காணும் இடங்களிலெல்லாம்
உன் பிம்பம்.

கண்ணைக் கசக்கிப் பார்த்தால்,
மாயமாய் மறைந்து
வெறுமையான காட்சி.

பொட்டு இழந்த நெற்றி,
பூ விழுந்த கூந்தல்.

நீங்கள் கட்டிய கெட்டித் தாலிக்கு
ஆயுள் குறைவென்று
அறியாது போனேனே.

முழுநிலவாய் பிரகாசித்த என் முகம்
பொலிவிழந்துபோனதேனோ?

எல்லாம் இழந்து
அமாவாசையாய் ஆனதேனோ?
வானவில்லாய் வலம் வந்தவளை
வண்ணமிழந்து போகவிட்டதேனோ?

வண்ணங்கள் போனதால்,
என் எண்ணங்கள் எல்லாம்
கரைந்தே போனதே.



பாதி வழியில் என்னைப்
பரிதவிக்க விட்டுப் போன
என்னில் பாதியான
என் பதியானவனே!

என் வாழ்வின் கணக்கில்லா
உன் நினைவுகள் மட்டுமே
எல்லாமுமாய் என்னில்.

என் விழிவழி வரும் நீரும்,
உன் நினைவுகளும் மட்டுமே,
நான்
உன்னில் உறைந்துபோகும் வரை
என்னுடன்.

கவிஞர் சுமதி தேசிகன்

புலி பசித்தாலும் புல் தின்னாதென்ற பழமொழி வாழும் இம்மண்ணில்,
புலியைக் கண்டு அஞ்சாதோர் உண்டோ என்றும் மண்மீது?
"பரியது கூர்ங்கோட்டதாயினும் யானை
வெரூஉம் புலித்தாக்குறின்" என்ற வள்ளுவமுண்டு.
ஊக்கமுடைமை அதிகாரந்தன்னில் அதை நாமறிவோமே; அந்தப்
பரிய மஞ்சும் புலியும் சலாம் இட்டது மண்ணில் ஒருவர்க்கே!

தென்காயல் என்ற கீழக்கரையில் வாழ்ந்தார் ஒரு வள்ளல்; அவர்
திருநாமம் சீதக்காதி என்பதாம்; அவர் பெரும் வணிகர்.
மௌலா சாகிபும் முகமது பாத்திமாவும்
மண்பயனுறத் தந்திட்ட மக்கட் செல்வமே அப்பெரியார்.
செத்தும் கொடுத்தான் சீதக்காதி என வள்ளல்தன்மையால் அவர் இன்றும்
சாகாதிருக்கின்றார்; சீறாப்புராணம் எழுதிட ஒரு கருவியானாரே!

இஸ்லாமிய மதக் காப்பியமிது; நபிகள் நாயகம் பெருமை பேசும்.
இன்பத் தமிழுக்கு இன்பம் சேர்க்கும் காப்பியமிது என்றால் அது தவறில்லை.
இருபாகங்களாய் தொண்ணூற்றொன்று படலங்கள் கொண்டு,
ஐயாயிரத்து இருபத்தேழு பாடல்களில் நபிகளின்
ஐம்பதாண்டுக் கால முற்பகுதி வாழ்வைப் பாடினார் உமறுப் புலவர்.
ஐயன் நபிகளின் செயல்களிலொன்று எந்தன் மனத்தில் ஆழப் பதிந்ததே!



புலி வசனித்தப் படலம் என்றொரு படலம் அக்காப்பியமிதில் உண்டு;
புலியொன்று காட்டுப்பாதையில் படுத்திருந்தே அச்சமூட்டியது
பயணிப்போர்க்கு அவ்வழியில். பயணியொருவன் நபிகளிடம்
பயத்தைப் போக்கிட வேண்டுமென்று வேண்டிச் சரணடைந்தான்
அவர் தாளிலே!

பாய்ந்தே சென்றார் நெடுவேல் ஏந்திப் புலி இருக்குமிடம் நோக்கி;
புலி கண்டது சிங்கமொன்று தன்முன் தோன்ற என்றாலும்,
பார்த்தது அவர் திருமுகக் காட்சியில்; அதில் கண்டது
பரமனின் பரவசமளிக்கும் அன்பை. அதனால் அச்சமின்றி
பையவே சென்று அவர் திருவடி பணிந்து சலாம் இட்டதே!

பணிந்த புலியைத் தடவி அன்பு பாராட்டி, அவ்விடமிட்டு அகலப் பணிக்க,
பணித்தவர் உரைத்தது "நன்று, நன்று" எனப் பாராட்டி
வேறிடம் போனது அந்தப் புலியே.
பாடினார் உமறுப் புலவரும் அதனை;
எந்தன் நெஞ்சம் அன்பால் நெகிழவே!

சீறாப்புராணம் — முதல் பாகம் — புலி வசனித்தப் படலம் — பாடல் 766

இன்று தொட்டிவ ணெறியினி லுயிர்செகுத் திடுவ
தன்று வேறொரு காட்டினிற் புகுகவென் றறைந்த
மன்ற றுன்றிய முகம்மதின் மலரடி வணங்கி
நன்று நன்றெனப் போற்றியே நடந்தது வேங்கை.

இன்றில்லை,
எப்போதும்
என் அன்பின்
நேசத்தின்
வற்றாத ஊற்று நீ!

புரிகிறாயோ,
புரியவில்லையோ,
தெரியவில்லை!

இருந்தும்,
நான்
உன்னை நேசிக்கிறேன்!

எப்போது
புரிவாய் எனக்
கேட்கமாட்டேன்.

என் நேசம்
உண்மை!



நீ
என்னைப் புரியும் பொழுது
காலம் சென்றுவிடும்,
நரைமுடி துளிர்த்துவிடும்.

ஆனாலும்,
நான்
உன்னில் வைத்துள்ள
அன்பை
என்றும் அறிந்தவர் உள்ளார்!

அவரிடமே
என் காயங்களுக்கு
மருந்து போடும் வேளை,
வருந்திடுவேன் மனதால்.

பயனை அள்ளித் தெளித்திடுவார்,
"யாவும் நீயே என் வாழ்வில்" என
கண்டிடச் செய்வார் அன்றே!

கவிஞர் ஜுவனிற்றா கிங்ஸ்லி, கல்முனை (இலங்கை)

மழை இல்லாமல் நனைகிறேன்,
சத்தம் இல்லாமல் கத்துகிறேன்,
வலி இல்லாமல் அழுகிறேன்,
நீ இல்லாமல் வாழ்கிறேன்.



ஊரே தூங்கும் நள்ளிரவில்,
என் இதயம் மட்டும் விழித்திருக்கும்.

கண்ணீர்த் துளிகள்கூட
வெயிலாய் ஆவியாகிறது.

யாருக்கும் தெரியாத ரகசியம்,
இதயத்தின் உள்ளே ஒரு பாலைவனம்.

சிரிப்பின் பின்னால் ஒரு புயல்,
அமைதியின் பின்னால் ஒரு யுத்தம்.

நேசித்தேன் என்று சொல்லவில்லை,
நேசிக்கப்படவில்லை என்றும் சொல்லவில்லை.

இரண்டுக்கும் நடுவில்
நான் மட்டும் எரிந்துகொண்டிருக்கிறேன்.

வார்த்தைகள் இல்லாத கவிதை இது,
வாசிப்பவர் கண்ணீரில்தான்
இதன் பொருள் புரியும்.

இதயத்தின் வெயில்,
அப்படித்தான் சுடும்.

புனல் அறுத்து முரண் தழைக்க,
பள்ளம் வெம்பி வறண்டு போக,
பாழ்படும் அக்கம் தீயோர் சூழ,
பகை படூஉம் நிலம்.



மகாபாரத மூத்த
மகானாகிய ஆசிரியன்,
மணம் தேவையின்றியே
மகாவிரத குருவிரதன்.

வில்லுக்கு நல்லதொரு
விசயனைப் புனைந்தவன்,
விரிந்த கங்கையின்
விந்தியப் பகலவன்.

நூற்றுவர் கௌரவர்களின்
நூல் கொண்ட மந்திரவாதி,
நூற்றுக்குமாய் விரதங்களை
நூற்றுக்கொண்ட வித்தகன்.

பாண்டவர்களின் மனதினிலே
பாசத்தினை வித்திட்டவன்,
பாமாலைகளால் சூழ்ந்திட்டவன்.

தர்மனுக்கே ஆட்சியென
தர்மத்தை ஊன்றியவன்,
தற்பெருமை பேணாத
தன்னலமற்ற புனிதனவன்.

வெற்றியின் சிகரமவன்,
வெளிச்சமாய்ப் பாதையானவன்,
வெகுண்ட சிகண்டியினாலே
வெற்றுடம்பான தேவனவன்.



யாவற்றிலும் ரணமொன்றை மாத்திரம்
பிரசவித்துக் கொள்கிறது என் மனம்.
புரிந்தறிந்து அன்பாய்ப் பேசி,
மனிதம் பொழிய வேண்டிய
மானுடன் இன்று மதிகெட்டுத் திரிகிறான்.

என் சிரிப்பின் பின் உள்ள
சிந்தனைகள் ஆயிரம்.
இலகுவில் மானுடன்
இளைப்பாற விடமாட்டான்.
இளைஞனாகச் சொல்கிறேன்,
மானுடனை நம்பி
நீ நாற்றிசை ஏகாதே.

நல்வார்த்தை சொல்லிவிடினும்
அதில் நஞ்சிருக்கும்; நம்பாதே.
கடைசியில் "நற்றாட்டில் கைவிடல்"
சத்தியமாகும்; மறவாதே.

உணர்வுகளுக்கு மதிப்பில்லை,
அதை மிதிக்க மட்டும் மருந்துண்டு.
"துணை நிற்பேன்" எனச் சூளுரைத்த
அந்த நாவுக்கு
இன்று தரையில் கூட நிழலில்லை.

போலி நிழல் நம்பிச்
சுயமிழந்த எனக்கு,
நினைவில் கூட எழிலில்லை.
நினைத்தால் நின்று
கண்ணீர் வடிக்கிறேன்.
என் நிஜத்தின் மீதி இனி இல்லை.



கைகுலுக்கிக் கத்தி சொருகும்
நாடகங்களில்,
துடிப்பை நிறுத்திக் கொள்ளும்
என் இதயம் முழுதும்
தாங்க முடியாச் சுமைகள்.

தேன் வழியும் வார்த்தைகளில் மட்டும்
திறந்துகொள்ளும் என் பேதை விழிகளுக்குத்
தெரிவதில்லை அந்த விஷம்.

தேவைக்கு மட்டும் போதும்
இந்தப் பாவை என்று
என் உதிரம் பிழிந்தெடுக்கும்
அக்கல் நெஞ்சில்
இனி ஈரமுமுண்டோ?

சொந்தமென்றொரு பந்தமில்லை.
இந்தச் சுவர் மட்டுமே அதற்குச் சாட்சி.
உன்னில் என்னைத் தொலைத்துத் தவிக்கும்
அகோர இரவு இனியும் வேண்டாம்.

கவிஞர் நிஷ்லா, மாவனல்லை (இலங்கை)

தேடுதலில் முனைப்போடு தொடங்கும் வாழ்விது
நாடுவதற்காய்ப் போராட நல்வண்ண வழிகளுண்டு!
செல்கின்ற பாதையிலே சீர்தூக்கிப் பார்த்திடவே
கல்விதனைக் கொண்டாங்கு கடக்கவழி ஆயிரம்!

இப்படித்தான் வாழ்தல் என்றதோர் அறத்தை
எப்படியும் வாழ்தலினி என்றதனை மாற்றாது
சூழ்ந்திட்ட இன்னல்களைச் சுடுதழலில் தள்ள
வாழ்க்கையின் பாதையில் ஓராயிரம் வழிகள்!



உள்ளங்கைகள்

உள்ளங்கைகள் மிகவும்
உன்னதமானவை.

இரண்டும் ஒன்றிணைந்து
இறைவன் முன் நிற்கவும்,
இன்முகத்துடன் வணக்கம் சொல்லி
வரவேற்கவும் தெரிந்தவை.

சிலர் கைகுலுக்கும்போது,
"உன் உள்ளங்கை
ஏன் எப்போதும்
சூடாக இருக்கிறது?" என்பர்.



உள்ளத்தின் வெப்பம்
உள்ளங்கையில் வருவதைச்
சொல்ல முடியுமா?

உள்ளங்கைச் சமதளத்தில்
ஓடும் ரேகை ஆறுகள்
வாழ்வை வளமாக்குகிறதாம்.

காதலியின் முதுகிலது
அழுந்தப் பதிவதே
அன்புப் புயல் வீச
அதி முக்கியக் காரணம்.

இரண்டையும் ஒன்றாக்கி,
ஒரு கிண்ணம்போல்
எதிரே ஒருவன் ஏந்துகையில்,
என் உள்ளங்கைகள்
அருள் மழை பொழியட்டும்.

நிலவொளி அழகாகக் காட்சி தரவே,
இரவு வானம் கண்களை மறைக்க,
ஆழ்ந்த தூக்கத்தில் இருந்து விழித்தேன்.
அழகிய ஜோதி வதனம் என்னுள் மலர.

படம் பார்த்து ரசிக்க முடிகிறது,
ஆனால் உணர மட்டுமே வார்த்தை இல்லை.
கானல் நீரின் மயக்கம் போல,
வாழ்க்கை அமையும் தூரப்போக்கு நம்முள்.



எமக்கும் உள்ள தேடலைப் போல,
நானும் நிற்கிறேன் விழிகளைத் திறந்து.
பூட்டிய வீட்டுக்குள் நுழையும் கள்வனோ?
அதுவும் இங்கு தொடரும் கதையே!

இயற்கையின் சித்திரம் கண்முன் விரிய,
அதை அப்படியே கண்டு ரசிக்க முடிகிறது.
அந்தப் பேரமைதியை முழுதாய் உணர,
என் கைகளில் வார்த்தைகள் தாம் இல்லை!

அமைதி கவ்விய நள்ளிரவு வேளையில்,
காற்று வீசும் திசையினில் மனம் பறக்க,
வார்த்தைகள் அற்ற அந்த மௌன மொழியில்,
விடை தெரியா கேள்விகளோடு நானும் கூட!

கவிஞர் ஸபா நளீர், கண்டி (இலங்கை)

சுதந்திரம் தந்த சுவாசம்

சுதந்திரம் தந்த சுவாசம்,
சுற்றங்களின் அன்பான நேசம்!
எங்கும் சுதந்திரம்,
எதிலும் சுதந்திரம்!



கருத்தில் சுதந்திரம்,
பேச்சில் சுதந்திரம்!
எழுத்தில் சுதந்திரம்,
எண்ணத்தில் சுதந்திரம்!

தடையில்லாச் சுதந்திரம்,
தரணியில் நிரந்தரம்!
அடிமை யாருமில்லை,
அஞ்சிடத் தேவையில்லை!

ஆணவம் இங்கில்லை,
அதிகாரத்திற்கு
அடிபணிய வேண்டியதில்லை!

அனைவரும் சமம்,
அன்பினில் சங்கமம்!
நிம்மதி தரும் சுவாசம்,
நீங்காத மலர்களின் வாசம்!

குருதியில் விளைந்த சுதந்திரம்,
குடிமக்களின் நிம்மதியான சுவாசம்!
விடுதலை தந்த சுவாசம்,
வீரர்களின் தன்னலமற்ற தியாக கீதம்!

சுதந்திரத்தைப் போற்றுவோம்,
சுவாசத்தை நேசிப்போம்!

கவிஞர் பெ. வெங்கட லட்சுமி காந்தன், விருதுநகர்

அளவியல் வெண்பா (நேரிசை)

எனதாம் உயிராய், எனதாம் உணர்வாய்,
உனதன்பில் வாழும் உறவே; — உனதுள்
மனதின் வலியை மறைத்தாய் எனக்காய்,
கனவைத் தொலைத்தனையே காண்.

உற்றார் உறவும் உனதுறவில் கண்டே நான்,
பெற்றேன் உவகை; எனைப் பெற்றவனே! — நற்றியாகம்
சற்றும் குறுகிச் சறுக்காப் பெருந்தகையுன்
நற்றாள் தொழுதலே நன்று.



மகளாய்ப் பிறந்து,
மழலைச் சிரிப்பில் உலகை ரசிக்கிறாள்.



சிறுமியாய் வளர்ந்து,
கனவுகளைச் சிறகுகளாய் விரிக்கிறாள்.

இளம்பெண்ணாய் மாறி,
தன் பாதையைத் தானே தேடுகிறாள்.

மனைவியாய் நின்று,
ஒரு இல்லத்தின் இதயமாகிறாள்.

தாயாய் மாறி,
தன் உயிரையே இன்னொரு உயிரில் காண்கிறாள்.

காலம் கடந்து,
அனுபவம் அவள் முகத்தில் கோடுகளாய் எழுதினாலும்,
அவள் அன்பு மட்டும் என்றும் இளமையாகவே இருக்கும்.

பெண் என்பது ஒரு வாழ்க்கை அல்ல,
பல வாழ்க்கைகளைத் தாங்கி நிற்கும்
ஒரே ஓர் அழகான உலகம்.

ஒருவரைக் கடனாளியாகக் காண்பதில்
சமூகம் சரித்திரம் படைத்துக்கொண்டிருக்கிறது.
கடனற்ற வாழ்வென்பது
காலத்தின் பொக்கிஷமாகவே மாற்றப்பட்டுள்ளது.

வறியவர் முதல் வலிமையுள்ளவர் வரை,
ஏதோ ஒரு வகையில், ஏதோ ஒரு விதத்தில்
கடனானது கட்டாயமாக்கப்பட்டுவிட்டது.



ஆம், அலங்காரங்கள் இன்று
அத்தியாவசியமாக்கப்படுகின்றன;
அத்தியாவசியம் எல்லாம்
அதிசயமாக்கப்படுகிறது.

அன்பானவர் என்பவர் கூட
அடுத்தகட்ட நிகழ்வுகளில்
அடிக்கல் இடுகின்றனர்.
உறவுகள்கூட உதிர்த்தே வாழத் தொடங்குகின்றன.

ஆம், கடன் இன்று
கடமையாக்கப்பட்டுள்ளது.
காயங்கள் நெஞ்சினில் ஆற வேண்டுமெனில்,
காலம்தான் இனி பதில் சொல்ல வேண்டும்.

அறவழி நடவான் ஆயினும் கேடில்லை;
புறம் பேசானாயின் நன்று.

காணும்போது புகழ்பாடி, காணாக்கால் இகழ் பேசுதல்,
பேணும் அறம் கெடுத்து பாவம் செய்தலினும் தீமையே.

பிறரைக் காணாவிடின் இகழ்ந்தும்,
கண்டவுடன் புகழ்ந்தும் பேசுவோர்,
சிறந்து வாழ்தலினும் இறப்பே மேலானது.



வருத்தம் தரும் சொற்களை ஒருவன் கூறுவான் எனினும்,
பொருத்தமின்றி ஒருவனைப் புறங்கூறல் தகாதே.

புறங்கூறும் குணமுடைய பண்பினன் என்றும்,
அறத்திற்கு நண்பனாக இல்லாதானே.

பிறருடைய குற்றங்களை இழித்துப் பேசுவோனின்
சிறப்பற்ற நிலையை ஆராய்ந்து வழிமொழிவரே மற்றோர்.

இன்சொல் பேசி உறவாடி மகிழாதார்,
வன்சொல் வீசி பிரிந்து செல்வரே.

நெருங்கிப் பழகியோர் குற்றத்தையே முரசு கொட்டுவோர்,
நெருங்காத அழகிய சுற்றத்தைத் தூற்றாமல் போற்றுவரோ?

இல்லாதபோதும் ஒருவனைப் பழித்துப் பேசுபவன் யாக்கையை
இவ்வுலகம் சுமக்கிறதெனில், அறத்தின் வாக்காலே.

புறம் கூறுவதற்கே பிறர் குற்றங்களை ஆராய்வான் சிறிதேனும்,
குற்றம் தன்னிடம் இருப்பதை உணர்தல் தீதன்று.

பிரதியுபகாரம் எதிர்பாராத
அன்புக் கணவனால்தான்
களைகட்டி நிற்கிறது.
கணவன்கள் அவள்களின்
மின்மினி தேசங்கள்.

பிள்ளைக் கனவில் வானில்
அவளைச் சுற்றிச் சுற்றியே,
அவளாசைகள், அவள் விருப்பங்களுக்காய்,
தன்நிலை மறந்து,
உழைத்து மரத்துப்போன
கரங்கள் மறைத்து,
நெஞ்செல்லாம் சுமந்து வாழ்கிறான்.

ஆசை ஆசையாய்
அவன் வாரிசின் வரவிற்காய்,
அவளோடு அவனும்
இணைந்தே இன்புறுகிறான்.

பெண்ணே, நீ மகளாய் வாழ்வது
உலக வாழ்வின் சொற்பங்களைத்தான்.

நீ தாரமாய் தரணியில்
தலைகாட்டி வாழ,
இந்தக் கணவனே
நீடுழி வாழ்வின்
நெடுங்கயிறு.



அவன் திருப்தியில் உன் சுவனம்
என்றுரைத்தான் ஏகவல்லோன்.

பிரதியுபகாரம் மறந்து,
உனக்கான தேசத்தை
பசுமையாய் நெய்கிறான்.

நீ மலரும் ஒவ்வொரு புன்னகையிலும்
அவனது அன்பும் அரவணைப்பும்
தூறலாய்த் தொடர்கின்றன.

பிடித்தமானதெனும்
ஒரே காரணம்தான்,
விரல் தாண்டி
வளர்ந்த நகங்களை
வெட்டாமல்
வைத்துக்கொள்ள.



தற்செயலாகவோ,
அல்லது
அதுவே விருப்பப்பட்டோ,
உடையும் போது
உடையட்டும்.

அதுவரை
அப்படியே
பிடித்துக்கொள்கிறேன்
என் பிரியத்தை.

கவிஞர் நா. அமிர்தலட்சுமி, பழனி

நெகிழ் மனதின்
ஆணிவேரில் ஊறிவிட்ட
கனிமம் போலத்தான்,
உன் அன்பின்
திராணியில் ஊறிவிட்டது
என் ஆழ்மனம்.



உன் மீதான என் ஈடுபாடு
எப்பேற்பட்டது தெரியுமா?

கிஞ்சிற்றும் சிந்தை
தீட்டாமல்,
என் கண்களை வியர்க்கச் செய்து,
விருப்புப் பட்டியலைத்
தன் வசமாக்கிக் கொண்ட
அந்தப் புத்தகங்களுக்கிடையே
நான் சேமித்து
வைத்திருந்த மயிலிறகு
போலவேதான் நீயும் எனக்கு!

கவிஞர் அதீனா அபூ உபைதா, ஓட்டமாவடி (இலங்கை)

குவியலில் கிடக்கிறபோது,
அழகாய்த்தான் தெரிகின்றன.
பார்த்துப் பார்த்து வாங்கும்போது,
உள்ளே ஒளிந்திருக்கும்
முட்கள் தெரிவதில்லை.



வாய்க்கு ருசியாய்
சமைக்க முயலும்போதுதான்,
அவற்றின் இயல்பு
வெளிப்படுகிறது.
விராலாக இல்லாவிட்டாலும்,
கொக்கிசான்கள் போதும்
விருந்தின் வெற்றிக்கு.

பொட்டியான்களாகவும்,
பேத்தைகளாகவும் அவை
தம்மை வெளிக்காட்டுகிறபோது,
ஏமாந்துபோன நம் அறியாமை
சற்று அதிர்ச்சியானதுதான்.

கரையொதுங்க வேண்டியவற்றைக்
கல்லைக்குள் நிரப்ப எண்ணும்
நம் முட்டாள்தனத்திற்கு,
எந்தப் பேத்தையும் பொறுப்பில்லை.

விரால், கொக்கிசான், சுறா, சூரை,
அறுக்குளா, பாரை, பொட்டியான், பேத்தை,
அனைத்தும் இணைந்த கடலும்,
ஆறும் போலவேதான் வாழ்வும்.

ஒரு காலத்தில்
ஏரி இருந்த இடத்தில் - இன்று
அடுக்குமாடிக் கட்டிடங்கள்!

நீரின் முகத்தில்
வானம் தெரிந்த காலம் போய்,
கண்ணாடிச் சுவர்களில்
வானம் சிறைப்பட்டிருக்கிறது!

தாமரைகள் பூத்த இடத்தில்
தரைத்தள வாகன நிறுத்தம்;
மீன்கள் நீந்திய இடத்தில்
மனிதர்கள் நடமாட்டம்!

அன்று மக்கள்
இயற்கையை ரசித்துக் குளித்த
ஏரிக்கரையினிடத்தில்,
இன்று செயற்கையாய்
உருவாக்கப்பட்ட நீர்த்தடாகங்கள்!

அன்று தூய தென்றல் காற்றை
சுதந்திரமாய்ச் சுவாசித்துக்
கொண்டிருந்த இடத்தில்,
இன்று நச்சுப் புகையோடு
தூசி நிறைந்த புழுதிக்காற்றை
சுவாசித்துக் கொண்டிருக்கிறார்கள்
இந்த நகரத்து மனிதர்கள்!

ஏரிக்குள் வந்து
அமைதியாய் இருந்த மழைநீர்,
இப்போது நகருக்குள் வந்து
மனிதர்களை வெளியேற்றுகிறது!



ஏரியை நிரப்பிய நகரம்
ஒருநாள், தன் தெருக்களில்
வெள்ளத்தை நிரப்பிக்கொள்கிறது!

ஏரிகள் வெறும் நீர்நிலைகள் அல்ல;
அவை ஒரு நகரத்தின்
மறந்துபோன நினைவலைகள்!

ஏரிகளைக் கொன்ற பாவத்திற்காய்,
இப்பொழுது நகரம்
தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கிறது!

கலையும் கலாச்சாரமும்
வாழ்வியலின் கண்களாம்.
இசைத்தமிழ் இறைவனுக்கே
இன்பத்தைத் தந்திடுமே!

நோயில்லா உடலோடு
நூறாண்டு வாழ்ந்து,
இன்பத் தமிழின் வாழ்வியலை
இனிதே அருந்தி மகிழ்ந்திடுவோம்!



வீரத்தின் விளைநிலமாய்
வாழ்ந்திட்ட தமிழன்தான்,
வெற்றி என்னும் மகுடத்தை
வென்றெடுக்கும் குணமே
மூச்சாய்க் கொண்டவன்தான்!

தமிழனின் உயர்வினை,
வாழ்வியல் கலாச்சாரத்தை,
கடல் கடந்தும் வளர்த்திட்ட
புகழான வாழ்வுக்குப்
புகழ் சேர்த்த தமிழன்தான்!

கல்வியில், கலையில்,
கலாச்சார மேம்பாட்டில்,
அறிவியலில், ஜோதிடத்தில்,
வானவியலில், இயல், இசை, நாடகத்தில்,
தமிழே என்றும்
தரணிக்கும் முதன்மை!

தாயான நாடும்,
தேனான மொழியும்,
தெவிட்டாத தமிழும்
எந்நாளும் உலகில்
எல்லோருக்கும் வழிகாட்டும்
கலங்கரை விளக்கமே!

கருவறையில் சுமந்து,
எல்லா வலிகளையும் தாங்கி,
சிசுவைப் பெற்றெடுத்து,

அனுதினமும் பார்த்துப் பார்த்து
கவனித்து,
தக்க நேரத்தில் உணவூட்டி,
பேணிக் காத்து வருகிறாளே.



இப்படியே காலங்கள் கடந்தன.

இப்போது அவள்
பெரிய பெண்ணாய்,
அழகாய்த் திகழ்கிறாளே.

இதுவே ஒரு தாயின்
மிகப் பெரிய
மகிழ்ச்சித் தருணம் ஆகுமே!

கவிஞர் மா. மோனிஷா

1.
எங்களை மட்டும் சேரியில்
ஒதுக்கி வைத்துவிட்டு,
ஊரோடு ஒத்து வாழ் என்று
சொன்னால்
நியாயமா?

2.
பிட்டுக்கு மண் சுமந்து
பிரம்படி பட்ட சிவனே,
ஒன்று செய்.

துட்டுக்கு மண்ணை அள்ளி
ஆறுகளை அழிக்கும் சுயநலவாதிகள்
பக்கம் பிரம்பைத் திரும்பச் சொல்.

3.
காலையில் நடைபெற்ற
விழாவில் சமாதானப் புறாவைப்
பறக்கவிட்டவர்,
மாலையில்
சமையல்காரனை வேலையை
விட்டு நீக்கினார்.

புறாக்கறி
சமைக்கவில்லை என்று!



4.
வாழ்ந்த காலம் எல்லாம்
கஞ்சி இன்றி,
பசியோடு இறந்தவனை
பன்னீர் தெளித்து
படுக்க வைத்தார்கள்
சவப்பெட்டியில்.

5.
கோவலன்தான்
கேவலன் ஆனான்
கண்ணகியைப் பிரிந்து.

மாற்று வாழ்க்கை நாடாத
மாசற்ற கண்ணகியையும்,
துறவறம் பூண்டு
தூய்மை அடைந்த மாதவியையும்
வைத்து ஏன் இன்னும்
பட்டிமன்றம் நடத்துகிறார்கள்?

கற்பில் சிறந்தவள்
கண்ணகியா, மாதவியா?
என்று.

6.
முல்லைக்குத் தேர் தந்த
பாரியே,
எமது சேரிப்பக்கமும்
நடந்து வா.

எங்களுக்கு
வீடே இல்லை!

7.
தினசரி அலுவலகத்திற்கு
குடித்துவிட்டு வந்தவனை
தண்ணீரில்லாத
காட்டுக்கு மாற்றினார்கள்.

அங்கேயும்
மதுக்கடை!

இருள் சூழ்ந்த உலகில்
ஒளிவிளக்காய் வந்தவரே!
கருணையின் கடலே,
ரஹ்மத்தின் வடிவமே!

அனாதைகளின் தோழரே,
ஏழைகளின் நேசரே!
பொய்யை அழித்து
மெய்யை நிலைநாட்ட வந்த
மாநபியே!

மன்னிப்பின் மழையே,
பொறுமையின் மலையே!
பெண்களுக்கு மாண்பு தந்தீர்,
குழந்தைகளுக்குப் பாசம் தந்தீர்!

எதிரிக்கும் நன்மை செய்து
இதயம் வென்ற மனிதரே!
கல்வி கற்க
தொட்டில் முதல் கல்லறை வரை
என்றுரைத்தீரே!

அண்டை வீட்டார் பசிக்கும்போது
நீர் உண்ணாதீர் என்றுரைத்தீரே!
சொல்லாலும் செயலாலும்
வாழ்ந்து காட்டிய வழிகாட்டியே!

அன்பே மார்க்கம்,
அமைதியே வாழ்வு
என்று வாழ்ந்தவரே!



உம்மத்தின் மீது கவலை கொண்டு
இறைவனிடம் கையேந்தியவரே!
உமது பெயர் சொல்லும்போதே
இதயம் குளிர்கிறதே!

உலகம் போற்றும் மாநபியே,
ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்!
உம்மைப் போற்றிப் புகழ
வாழ்நாள் போதாதே!

தெருவோரங்களில் நாற்றத்துடன்
நிற்கும் பரிதாபங்கள்.

தினந்தோறும் குப்பைகளின்
குளியலில் மூச்சுத்திணறலாய்.

அசிங்கங்களின் அரவணைப்பில்
வேதனையின் முகங்களாய்.

அருகில் யாரும்
நிற்க முடியாத வேதனைகளாய்.

தனக்குள் எல்லாவற்றையும்
நிரப்பிக்கொண்டு,

மனிதனின் ஆரோக்கியம்
பேணும் குப்பைத்தொட்டிகள்.

சுகாதாரத்தின் உண்மையான,
நேர்மையான காவல்காரனாய்.



கவிஞர் ரா. பிரேம் சுரேஷ், கோத்தகிரி



சிறகுகள் விரிக்கும்
ஆசைக் குருவி,
சிறைப்பட்டு வாழும்
பாசப் பறவை.

மின்னல் கீற்றாய்
தோன்றும் நினைவு,
மீள முடியா
காதல் கனவு,
நிலவாய் ஒளிரும்
அன்பின் சுடரே!

நிழலாய் தொடரும்
நெஞ்சின் நிஜமே,
கண்ணீர் மழையாய்
பொழியும் ரகசியம்,
கானல் நீராய்
மாறும் அதிசயம்.

பாறை நெஞ்சில்
பாயும் அருவி,
பாதை காட்டும்
பாசக் கருவி.

கால நதியில்
மிதக்கும் ஓடம்,
காயம்பட்டாலும்
புன்னகைக் கோலம்,
வார்த்தையின்றிப்
பேசும் மௌனம்,
வாழ்க்கை நடத்தும்
பாசப் பயணம்,
இன்பத் துன்பம்
நிறைந்த கோளம்.

என்றும் மாறா
அன்பின் உலகம்,
நினைவலை மோதும்
நெஞ்சக் கரையே,
நிம்மதி தேடும்
உயிரின் அலையே,
ரகசியங்கள் புதைந்த
பெருவெளி,
ராகங்கள் பாடும்
காதல் விழி.

கவிஞர் கோ. கே. ஜெழுமலை, நத்தம்மூர் (உளுந்தூர்பேட்டை)

ஏரிகள் நிறைந்தால் விளைச்சல் பெருகும்,
வரப்புகள் உயர்ந்தால் நீரும் உயரும்,
கழனிகள் வளம் பெற ஏரிகளும் உதவிடும்,
உழவர்கள் வாழ்ந்திட நிறைந்திடத் தேவையே!

பருவமழை பொய்த்திடப் பாழ்படும் நிலங்களே,
பருவம் தவறியதால் பயிர்களும் அழியும்,
வறண்டிடும் நிலத்தில் உயிர்நீர் தேவை,
அழிவினைக் காக்க உயர்த்திடு கரையை!



நாட்டின் முதுகெலும்பே விவசாயம் தானே,
உழவர்கள் விரும்பிடும் பருவமழை வரவை,
உணவைத் தந்திடும் உழவர்களுக்கு உதவிடும்
நீர்நிலைகளைக் காப்போம், நீரினைப் பெருக்க!

கால்நடை உதவியும் கடைசிவரைத் தேவை,
கழிவுகளை உரமாக்கிப் பயிருக்குத் தருவோம்,
இயற்கை விவசாயம் கைகொடுத்துத் தூக்கும்,
மழையும் தவறினால் விவசாயியைத் தாக்கும்!

நீரின்றி அமையாது உலகு என்றும்,
நிகழ்வான மழைக்காக இறைவனை வணங்கினாலே,
பொழிந்திடும் மழையால் ஏரிக் குளமும் நிறையும்,
நிறைந்த நீர்நிலையால் வாழ்க்கையும் நிறையும்!

உயர்வான இடத்தினைப் பெறுவது
மொழியே ஆகும்.
பல மொழிகளைக் கற்றுத் தெளிந்தாலும்,
நம் தாய்மொழியே உயர்வானதாகும்.

எந்த நாட்டிலும் இல்லாத பெருமை
நம் பாரத மண்ணிற்கு உண்டு.
பல்வேறு மாநிலங்களில் பேசப்படும் மொழிகள்,
ஒவ்வொரு மாநிலத்தின்
கலாச்சாரங்களும் பண்பாடுகளும்,
பல்வேறு கலைத்திறன்களும்
நம் நாட்டின் பெருமை சொல்லும்.



கலை வேலைப்பாடுகள்,
கோவில் சிற்பங்கள் என
எண்ணற்ற திறமைகள் நிறைந்த
இந்த நாட்டில் வாழ்கிறோம்
என்று நினைக்கையிலே
மனம் மகிழ்ச்சி அடைகிறதே!

அடுத்த நாடுகளும் புகழும்
நம் நாடு,
«வேற்றுமையில் ஒற்றுமை» எனும்
பெருமை கொண்டது.

இமயம் முதல் குமரி வரை
விரிந்து பரந்த இந்நாட்டில்,
பல்வேறு நதிகள் பாய்ந்து
நிலங்களைச் செழுமையாக்குகின்றன.

ஆதிகால மனிதன்
சைகை மொழியால்
கருத்துகளைப் பரிமாறிக் கொண்டான்.
நாகரிகம் வளர வளர,
மொழிகளும் வளர்ந்தன;
நாமும் முன்னேறினோம்.

இன்று நம் வளர்ச்சியைப் பார்த்து
மற்ற நாடுகளும்
திரும்பிப் பார்க்கின்றன.

ஒவ்வொரு துறையிலும்
வெற்றிகளைக் குவித்து வரும்
திறமைமிக்க இளைஞர்களைக் கொண்ட
நாடு நம் நாடு!

கடின உழைப்பின் துணையுடன்
விரைவிலேயே
வல்லரசு நாடுகளில் ஒன்றாக
நம் நாடு உயர்ந்திடும்.

மொழிகளைப் போற்றுவோம்,
தாய்மொழியை நேசிப்போம்,
வேற்றுமையில் ஒற்றுமை காத்து
வளமான பாரதத்தை உருவாக்குவோம்!

கவிஞர் ஆ. கிருஷ்ணவேணி, ஊத்தங்கரை

அறம் வீழ்ந்த
அருமை அங்காடி,
தீயில் வெந்தழியும்
அன்பின் இருட்டடைப்பு,

அடிவேரை நயமாய் அறுக்கும்
நவீனத்துவம்,
வயோதிகர் பாரமானதால்
முதியோர் இல்லத்தில்,



உதிரப் பிணைப்புகளை
அந்நியராக்கும் ஆக்கம்,
குருதி வணிகமாய்
செயற்கைச் சிறை,

முறிந்த பிணைப்புகள்,
உறைந்த பாசம்,
மரணித்த நன்றியின்
இறுதி ஊர்வலமோ?

பணமும் பதவியும்
நொடியில் கரையும்,
ஆனால் அன்பு தோய்ந்த உறவுகள்
ஆன்மாவை நனைக்கும்
வற்றாத ஜீவநதி.

சுயநலம் தவிர்த்து,
நேயத்தை வளர்ப்போம்!

கவிஞர் சுகுமாரி சுந்தரராஜன், விருதுநகர்

பல நாள் உறவில்
ஒரு முறை பிரிவு வந்தாலும்,
அவர்களின் வாழ்வில்
அந்த நினைவு
பல நாட்கள் தொடர்கிறது.

பிரிவின் துயரத்தை
நினைவுகளே தொலைக்கின்றன.



என்றும் நினைவில் வாழும்
பல உறவுகள்
பிரிந்தாலும்
மனதை விட்டு
பிரிவதில்லை.

விழிகளின் உறக்கத்தில்
விழித்திருக்கும் இரவு
எப்படி இருக்கும் தெரியுமா?

நீல வானம்
கருமை பூசி நிற்க,
நிலவொளி தீண்ட,
விண்மீன்கள் மிதக்க,

தென்றல் கொஞ்சிட,
பூவின் காதல்
மணம் திறந்து,
இதழ் விரிக்கும்.

மணற்கரையில் எஞ்சிய
காலடித் தடங்களை
அலைகள் தொட்டு
ரசிக்கும்.

இரைச்சல் மறந்து,
சாலையின் இதயமும்
மகிழும்.

கூட்டம் இல்லாத தனிமையில்,
இரவின் காதல்
அழகிய மௌனமாய்
ஊர்கோலம் போகும்.





ஆவியான கடல்நீர் மேகமாய் மாறி,
புவியின் தாகம் தீர்த்திட மாரியாய்
வந்திறங்கிய பயணத்தில் இடம்பெற்றேன் நானும்!
சீறித் திரண்ட புயலொன்று வீசியதில்,
போர்க்களமாய் மாறியதே எந்தன் பயணம்!
வேர்களைப் பறித்துச் சாய்த்தது மரங்களை!
புயலின் சீற்றம் பூமி அறிந்ததே!
சீற்றமுடன் காற்று சிதைத்தது என்னையும்!
செய்வதறியாது திகைத்து, காற்றின் போக்கில்
பயணிக்கும் வேளையில், வீசி எறிந்தது
உயரத்தில் என்னை! தரையில் வீழாமல்
தலைசுற்றி விழுந்தேன் ஒரு வீட்டின்மேல்!
மானிடரின் வாழ்க்கைப் பயணமும் இதுபோல்தான்!
பாதைகள் மாறலாம்! பயணங்கள் தொடரலாம்!
அதிர்ஷ்டக் காற்றால் அடைந்திடலாம் உச்சத்தை!
விதிவசப்பட்டு எதிர்பாரா வீழ்ச்சியையும் கண்டிடலாம்!
பெருங்காற்றை எதிர்த்துப் போராட முடியாமல்,
சிறுதுளி நான் சேர்ந்திட்டேன் வேறிடத்தில்!
"காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்பார்கள்!
காற்றோ எனைத் தூற்றித் தள்ளியதே!
மரங்களையும் மனிதர்களையும் ஆட்டுவிக்கும்
பெருங்காற்று! இதுதான் விதியென்றால்,
சிறுதுளி நான் என் செய்வேன்?

இந்த உலகமெங்கும் வியாபித்திருக்கும்,
உறவுகளுக்குள் இனிமை சேர்த்திடும்,
சுயநலமாய்ச் சிந்திக்காது!

கட்டுண்டவர்களால் விடுபட முடியாது,
தன்னலமில்லாமல் சேவை புரிந்திடும்,
கண்ணீரில் கரைந்துவிடும்!



வான்கொடையாய்
மண்ணுக்குள் இறங்கும்
மழைநீர்போல் தூய்மையானது!

கள்ளமில்லா
மழலையின் சிரிப்பாய்,
காண்போர்க்கு மகிழ்ச்சியைக் கடத்திடும்!

மன்னிக்கின்ற தன்மை உண்டு,
எதிர்பார்ப்பின்றி,
பாரபட்சம் பார்க்காமல்,
பிரபஞ்சத்தின் மூச்சுக்காற்றாய்
இவ்வுலகமெங்கும் நிறைந்திருக்கும்!

அன்பு என்ற ஒற்றைச் சொல்லைத் தவிர,
வேறெந்த சொல் அவனியில்
உயர்ந்த சொல்லாய்
இருந்திட முடியும்?

கவிஞர் லதா சுப்ரமணியன், சென்னை-119

வண்ணக் காகிதம்,
வாசல் தோரணம்,
வாடாத மனங்கள்,
வளையாடும் கைகள்,
வசந்தங்கள் பாடும்
வானத்து நீலத்தில்,

வா என்ற தாரகைகள்
வண்ணமாய் சிரிக்குது,
வருங்கால மின்னல்கள்,
வருடங்களின் ஓட்டமும்,
வயிறார உணவும்!

வயல்வெளி வாசங்கள்,
வளைந்தோடும் நதியே,
வட்டமான வெண்ணிலா
வருகையில் வெளிச்சமும்,
வாழ்க்கையின் பாதையில்
வழிவிடும் தென்றலே!

வழக்கமான நாட்கள்,
வளைவுகளும் நெளிவுகளும்,
வாயின் முனுமுனுப்பும்,
வந்தாடிய மௌனத்தில்
வடிவான புன்னகையும்!

வாழ்க வளமுடன்,
வரமொன்று வேண்டியே
வண்ணவலை விரித்தேன்!





பிறக்குமுன்னே தந்தையை இழந்தீர்,
வளரும்போதே தாயையும் இழந்தீர்.
அநாதையின் வலியை அறிந்ததாலோ,
அநாதைகளுக்கும் கருணை காட்டினீர்.
யா ரஸூலல்லாஹ்...!

பேச்சிலே உண்மையை விதைத்தீர்,
வாழ்விலே நேர்மையைப் படைத்தீர்,
பரிச்சயமில்லா மனிதருக்கும்
பாசத்தோடு அடைக்கலம் கொடுத்தீர்.
யா ரஸூலல்லாஹ்...!

ஏழையென்றும் பணக்காரனென்றும்
பிரிவினை காட்டவில்லை,
அன்பு கேட்டு வந்தவர்களுக்கு
அன்பினைக் குறைவின்றிக் கொடுத்தீர்.

கருமை நிறமென்றும்,
குலம் உயர்வென்றும்
மனிதரைப் பிரிக்கவில்லை;
அல்லாஹ்வின் முன்
தக்வாவே உயர்வென்று
உலகத்திற்கு உணர்த்தினீர்.

உத்தம ரஸூலே ﷺ!
தூதுவராய் வந்தீரே,
தூய்மையின் பாதை தந்தீரே,
பகைமை கொண்டோருக்கும்
பழிவாங்க எண்ணாது,
நன்மையையே நினைத்தீரே!

கல்லெறிந்த கைகளுக்கும்
கருணையைப் பொழிந்தீரே,
காயப்படுத்திய உள்ளங்களுக்கும்
நல்வழி வேண்டி நின்றீரே.
யா ரஸூலல்லாஹ்...!

பாரினில் வாழ்ந்தும்
உம்மைக் காணாது போனோம் நாமே,
உம்மைப் பார்த்தறியாத
பாக்கியம் இழந்த உம்மத்தினரே நாமே.

எங்கள் குறைகள் கடலென இருந்தாலும்,
நம்பிக்கை மட்டும் குறையவில்லை;
மறுமை நாளில்
உம்மத்தின் மீது கருணை கொண்டு,
எங்களுக்காகச் சிபாரிசு செய்வீரே...
யா ரஸூலல்லாஹ் ﷺ!

உம் பாதம் காணாத கண்களுடன்,
உம் காலத்தில் வாழாத நெஞ்சங்களுடன்,
உம்மை நேசித்தே வாழ்கிறோம் நாங்கள்.

மறுமை நாளில்
உம் உம்மத்தில் எங்களையும்
சேர்த்தருள்வீராக!

கவிஞர் சுஹைனாஸ் பேகம், முதலைப்பாளி (இலங்கை)

கோடுகள் அற்ற சட்டங்களுக்குள்
அடைபட முடியாமல் சண்டையிடுகின்றன
உன் கூர்விழிகள்!

புதிதாய் நகர்ந்த இலை ஒன்று
இளம் காற்றில் அசைந்து,
உன் சதிராடும் விழிகளோடு
சண்டையிட முடியாமல்
சரணாகதி மந்திரத்தைச் சட்டென உச்சரிக்கிறது!



மோகப் பித்தேறி
பூவில் புரளும் வண்டுகளாய்
என்னை மாற்றிய ரௌத்திரம்,
உன் விழிகளுக்குள்
எப்படி துளிர்த்தது?

புயல் கடந்த நிலமாய்,
போர் கொண்ட சிங்கமாய் இருந்த என்னை
மழை சூழ்ந்த நிலமாய்
மாற்றிப் போடுகிறது உன் மைவிழி!

உன் உருளும் விழிகள் பேசும்
ஊமை நடனத்தில்,
இன்று ககனமெங்கும் கேட்கிறது
கார்காலக் கச்சேரி!

கதியாய் தொடங்கிய கார்கால மழை,
விழுதாய் விழுந்து,
நிரம்பி வழியும் நீரோடைகள் எங்கும்
உன் நீலோற்பல விழிகளின் சிரிப்பு
விருந்து வைக்கையில்,

எனக்குள் உந்தன் நிழல்
வேர்பிடித்து வேகமாய் வளர்கிறது!

நல்ல உறவுகள் எம் கண்முன்னே!
ரத்த உறவுகள் என்னவோ
சட்டென்று உதவி செய்வார்கள்;
மற்ற உறவுகள் கேள்விக்குறியே!

பேரும் புகழுமாக நாம் இருந்தால்
பேர் சொல்லி வருவார்கள்.

எதுவும் இல்லையென்றால்,
"உறவென்று நீங்களுமா?"
என மூக்கின் மேல்
விரல் வைப்பார்கள்.

உறவுகள் எப்போதும்
உண்மையாக இருக்க வேண்டும்.

மண்டியிட்டு பல கதைகள் பேசி,
இன்பம் கண்டு,
உறவினை அறிமுகப்படுத்தத்
தேவையில்லை.

எங்கு சென்றபோதிலும்
அடையாளம் கண்டு,
ஓடோடி வந்து அருகில் அமர்ந்து
சுகம் விசாரிக்கும் உறவு,
அது எதிர்பார்ப்பில்லா உறவாகும்.

உண்மையில்,
வாழ்வின் அர்த்தத்தை
எதிர்பார்ப்புகள் ஏமாற்றமாகும் போது
அறியலாம்.



அந்நேரம்
எம்மையே நாம்
கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

அதுவே
உறவின் ஆழம் வலி தராமல்,
எம்மையே நாம்
மாற்றியமைக்க உதவும்.

வாழ்வின் நிதர்சனங்கள்
நல்ல உறவுகளே!

அது சரியாக அமைந்தால்
வானத்தின் எல்லையை
இலகுவாகத் தொட்டுவிடலாம்!

தாளிடப்பட்ட சாளரங்கள்,
அடைக்கப்பட்ட கதவுகள்
மீண்டும் தட்டப்படலாகாது.

மூடப்பட்ட கதவுகளைப் பார்த்து
உங்கள் கதை முடிந்ததென்று அழாதீர்கள்.
ஒவ்வொரு மூடிய கதவும்
இறைவனின் மௌனமான பதில்களில் ஒன்று.



அவசரப்படாதீர்கள்.
ஒவ்வொரு அடைக்கப்பட்ட கதவும்,
"இங்கே நீ பொருத்தமானவன் அல்ல"
என்பதற்கான அறிகுறி மட்டுமே.

"இதுவே உனக்கானது" என்று
ஒரே ஒரு புதிய கதவைத் திறந்து,
விதியையே வசந்தமாக மாற்றிவிடும்
அருளாளன் அவன்.
ஏனெனில்,
உங்கள் கண்ணீரைப் பிரார்த்தனையாகவும்,
உங்கள் பிரார்த்தனையைப் பேரருளாகவும்,
உங்கள் விதியை ஒளியாகவும்
மாற்றிவிடும் வல்லமை
அவனுக்கே உரியது.

உங்களுக்காக எழுதப்பட்ட
அருளின் கதவு திறக்கும்போது,
நேற்றைய எல்லா மறுப்புகளும்
அந்த ஒரு திறப்பின்
பொருளாகிவிடும்.

நம்பிக்கையுடன் காத்திருங்கள்.

அன்பும் அறமும் தந்து,
பண்பும் பகுத்தறிவும் தந்து,
அன்னையாய், அப்பனாய் இருந்து,
துன்பத்தில் தோள் கொடுத்து,
தோல்வியில் துணை நின்று,
சோர்வில் ஆறுதல் தந்து,
வெற்றியில் மகிழ்ந்து,
திருத்தங்கள் பல சொல்லி,
வாழ்வின் நெறியைக் காட்டிய
எனது கலங்கரை விளக்கே!
எனது ஆசானே!



உளி
செதுக்கிய
வலி உணரும்
என்
கற் கவசத்துள்
உயிராய்
உறைகிறான்
இறைவன்



நம்பிக்கை தந்திடும் நலமிக்க வாழ்வில்,
மலிவாய் நிறைந்து நிம்மதியை நசுக்குமே,
கடமைகள் அடைபட்டு கருத்தும் முடங்கி,
திடமான உறுதியால் தினந்தோறும் முயற்சியே.

குடும்பத்தில் கனமாய் குழப்பங்கள் கலந்து,
நடுநிலை குறைந்து நாளும் துயரமே,
பகுத்தறியாமல் பலநாள் உழன்று,
தொகுத்த நூலாகத் தவிக்குதே மனதும்.



விட்டுக் கொடுத்தால் விளையும் நன்மையே,
கூட்டுக் குடும்பமும் கொடுக்குமே அளவின்றி,
கடுகளவு பாதிப்பு கண்ணிலே தெரிந்தால்,
தடுக்கும் உடனேயே தரமான அறிவுரையாய்.

சொந்தங்கள் கூடினால் சொர்க்கத்தின் நிழலாய்,
வந்திடும் வாழ்த்துக்கள் வசந்த ஒளியாய்,
தவறுகள் திருத்தும் தானறிந்த எண்ணமாய்,
சுவராய் நிற்குமே சுதந்திரத் தாயாய்.

சிந்தனைத் தூண்டும் சிறப்பின் வளமாகி,
வந்தனை புரிந்திடும் வார்த்தையின் வனப்பாய்,
காலங்கள் வாழ்த்திடும் காவியச் சிறப்பாய்,
குலங்கள் வளர்த்திடும் குலத்தொழில் வடிவிலே.

சிறப்புகள் மிகுந்த சிந்தனை உயர்வாய்,
திறந்த உணர்வுகளில் திறமை நிறைக்குமே,
வார்த்தைகள் வசந்தம் வார்ப்பாய் நிறைந்து,
சேர்த்திடும் சுகங்கள் சிந்தனை வளர்ச்சியே.

களிப்பூட்டும் பேச்சுகள் கருணையில் தெரியுமே,
துளியாய் நிறைக்கும் துடிப்பான உணர்விலே,
நிம்மதி வார்த்தைகள் நித்தம் நிறைந்தால்,
சுமைகள் விலகும் சுத்தமாய் உலகிலே.

கவிஞர் பி. அன்பழகன், கடலூர்

ஏய்! ஆட்டோ
என்பதில் தெரிகிறது
அதிகாரத் திமிர்.

அந்தத் திமிருக்கு
அடங்கமறு என்கிறது மூளை;
அடங்க மறுத்தால்
வயிற்றுப் பசிக்கு இரையாவாய்
என்கிறது மனம்.

மனதின் இசைவுக்கேற்ப
ஓடிக்கொண்டிருக்கிறது
ஆட்டோவும்,
ஆட்டோ ஓட்டுநரின் வாழ்வும்.

ஆட்டோவோடு பயணித்த
வாழ்க்கைப் பாதையில்
ஓய்வின்றி ஓடிக்கொண்டிருக்கிறது
ஓட்டுநரின் வாழ்க்கையும்.



வாய்ப்புள்ளதால்

பெற்ற வெற்றி,
எதிர்பாராதவற்றை
எதிர்கொண்ட கணங்கள்,

அங்கீகாரத்தால் உள்ளம்
உச்சம் தொட்ட பொழுதுகள்,

நாளைய பொழுதுகள்
மீது நம்பிக்கை

என நேர்மறை சிந்தனைகளை
உறக்கத்துக்கு முன்னான
பொழுதுகளில் சேமிப்போம்.

நிம்மதியான
அமைதியான
தூக்க இரவுகள்,
நாளைய பணிக்கான
புத்துணர்வாய்!

காரணமாய்
மூளை ஞாபக மேல் அடுக்குகளில்
ஆக்கிரமிக்கப் போவதால்.



அங்கே

எதிர் மனிதரின்
பிடிக்காத பேச்சிலும்
விரும்பாத செயலிலும்,

முன்னர் நடந்த
இதே போன்ற நிகழ்வுகளை
மூளையின் ஞாபக
அடுக்குகளிலிருந்து
எடுத்து,

நாளையவற்றுக்கும்
கடத்தி,
உள்ளுக்குள்ளே
கோபமுற்று
பதற்றம் கொடுத்து,

அறிந்தவர்களிடத்தில்
எல்லாம் நேரிடையாய்
விமர்சனமும்,
மனதில் கொண்டு
மறைமுக விமர்சனமும்.

அங்கே ஆரம்பம்!

சிகரெட்டை வேகமாக உள்ளே இழுத்து வளையங்களாக புகை விட்டுக் கொண்டிருந்தான் கேப்டன் ராஜ்.
வஸந்தும் சுகுமாரும் உள்ளே வர "இனி உங்களை நம்பிப் பிரயோஜனம் இல்லை. நான் அந்தக் கேஸட்டை கைப்பற்ற வேறு வழி தேடிக் கொண்டிருக்கிறேன். மிஸ்டர் வினோத்" என்று கை தட்டி அழைத்தான்.
அடுத்த அறையிலிருந்து வெளியே வந்த ஆறடி உயரமுள்ள குறுந்தாடி சகிதமான வினோத் "எஸ் கேப்டன்" என்றான்.

"நீ என்ன பண்ணுகிறாய். உன் வேசத்தை மாற்றிக் கொண்டு நேரே ஆர்ப்பியாரைப் போய் பார்க்கிறாய். உன்னுடைய திருமண கேஸட்டைக் காணவில்லை என்றும் அதில் வெளியே 'விநோதினி' என்று பெயரிட்டிருக்கும் என்றும் சொல்லி விட்டு நீ உன் வழிகளைத் தேடுகிறாய்?."

"கவலையே படாதீர்கள் கேப்டன். சரியாக ஒரு வாரம் கொடுங்க. கேஸட்டை உங்கள் கையில் கொண்டு வந்து கொடுக்கிறேன்." என்றான் வினோத்
"அது சரி வஸந்த், வழக்கமாக நம்பிக்கை துரோகம் செய்கிறவர்களுக்கு நம்முடைய கூட்டத்திலே தண்டனை என்ன தெரியுமா?"

"நன்றாகத் தெரியும் கேப்டன். மரணதண்டனை"
"அப்படீன்னா உடனே கொடுத்து விட வேண்டியது தானே சுகுமார்?"
"ஆமாம் கேப்டன். ஆனால் நான் ஒரு தவறும் செய்யவில்லையே" என்றான் சுகுமார்.
"எப்பா குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்று சொல்வார்கள். பாரு நீ தான் தப்பு பண்ணினாய் என்றா நான் சொன்னேன்." என்றவாறு பாக்கெட்டிலிருந்த பிஸ்டலை எடுத்தான் கேப்டன் ராஜ்.
"கேப்டன் என்ன செய்யப் போகிறீர்கள்" என்றான் சுகுமார்.

"சுடப் போகிறேன் ஒரு நம்பிக்கையைத் துரோகியை. வஸந்த் அந்த ஐந்து ரூபாய் நோட்டை கொஞ்சம் அய்யா கிட்ட நீட்டு" என்றான்.

அத்தியாயம் - 4

நம்பிக்கை துரோகம்!



திகில் நவீனம்

வசந்த் எடுத்துக் கொடுத்த ஐந்து ரூபாய் நோட்டில் சுகுமார் எழுதி கொடுத்த 'வினிதா தப்பி விடு. நானும் வசந்தும் மாறு வேடத்தில் வந்திருக்கிறோம்' என்ற வார்த்தைகள்.

"ஆனாலும் எனக்குத் தெரியாமல் பக்கத்திலிருந்த ஆளிடம் கொடுத்து ரூபாயை வினிதாவிடம் சேர்த்து விட்டாய் இல்லையா சுகு. ஆனாலும் படு கில்லாடி தான்யா நீ" என்றான் வசந்த்.

"இந்த மாதிரி கில்லாடியெல்லாம் நம் கூட்டத்தில் இருக்கிறது ஆபத்தில்லையா" என்றான் கேப்டன் ராஜ் வினோத்தைப் பார்த்து.

"கேப்டன் தெரியாமல் செய்து விட்டேன். இனிமேல் இப்படி நடக்கவே நடக்காது" என்றான் சுகுமார்.

"எப்படி?.. எனக்குத் தெரியும் படியாக நடக்காது என்கிறாயா? இடியட். என் தலையிலே மொளகாப் பழம் அரைக்கப் பார்க்கிறாயா?

நம்பிக்கைத் துரோகிகள் வாழவேக் கூடாதுப்பா உலகத்திலே" என்றவாறு பிஸ்டலை இயக்கினான்.

தொடரும்...



தமிழிலக்கிய வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றம் புதுக்கவிதையின் வருகையாகும். கடினமான யாப்பு இலக்கணங்களுக்குள் சிக்கிக் கிடந்த கவிதையை விடுவித்து, பாமர மக்களின் பேச்சு மொழியிலும் சிந்தனைக்கு விருந்தளிக்கும் வகையில் வடிவம் கொடுத்த பெருமை கவிஞர் மு. மேத்தா அவர்களையே சாரும். எளிய சொற்கள், நயமான உருவகங்கள், மனதைத் தொடும் உணர்ச்சிகள் மற்றும் கூர்மையான சமூக விழிப்புணர்வு ஆகியவற்றைத் தம் கவிதைகளின் அடையாளமாகக் கொண்டு இயங்கியவர்.

பிறப்பும் இளமைக்காலமும்

மு. மேத்தா அவர்கள் 1945 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ஆம் தேதி தேனி மாவட்டத்தில் உள்ள பெரியகுளத்தில் பிறந்தார். சிறுவயது முதலே தமிழ் மொழியின் மீது அளப்பரிய பற்றும் ஈடுபாடும் கொண்டு திகழ்ந்தார். சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் இலக்கியத்தில் இளங்கலை, முதுகலை பட்டங்களைப் பெற்றதோடு, முனைவர் (Ph.D.) பட்டமும் நிறைவு செய்தார். பின்னர், தான் பயின்ற அதே சென்னை மாநிலக் கல்லூரியிலேயே தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி, ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு தமிழ் ஆர்வத்தையும் கவிதை உணர்வையும் ஊட்டி ஓய்வு பெற்றார்.

கவிதை உலகம் மற்றும் 'வானம்பாடி' இயக்கம்

1970-களில் தமிழில் புதுக்கவிதையை ஒரு பேரியக்கமாக மாற்றிய 'வானம்பாடி' கவிஞர்களின் வரிசையில் மு. மேத்தா மிக முக்கியப் பங்கு வகித்தார். மானுடத்தைப் பாடுவதும், வறுமை மற்றும் சமூக

கவிதை உலகம் மற்றும் 'வானம்பாடி' இயக்கம்

1970-களில் தமிழில் புதுக்கவிதையை ஒரு பேரியக்கமாக மாற்றிய 'வானம்பாடி' கவிஞர்களின் வரிசையில் மு. மேத்தா மிக முக்கியப் பங்கு வகித்தார். மானுடத்தைப் பாடுவதும், வறுமை மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பதும் வானம்பாடி இயக்கத்தின் நோக்கமாக இருந்தது. மேத்தாவின் கவிதைகள் காதல், சோகம், சமூகப் புரட்சி, மானுட நேயம் போன்ற பல கோணங்களில் மலர்ந்தன.

படைப்புகள் மற்றும் நூல்கள்

கவிதை மட்டுமன்றிச் சிறுகதை, நாவல், நாடகம், கட்டுரை மற்றும் திரைப்படப் பாடல்கள் எனத் தமிழ் இலக்கியத்தின் பல தளங்களில் மேத்தா தடம்பதித்துள்ளார்.

கண்ணீர்ப் பூக்கள்: மேத்தாவின் முதல் கவிதைத் தொகுப்பு. கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் பெரும் புரட்சியை ஏற்படுத்திய நூல்.

ஆகாயத்துக்கு அடுத்த வீடு: மனித வாழ்வின் ஆழமான தத்துவங்களையும் எதார்த்தங்களையும் பேசும் இக்கவிதைத் தொகுப்பிற்கு 2006-ஆம் ஆண்டு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது.

ஊர்வலம்: சமூக விழிப்புணர்வையும் அரசியல் சிந்தனைகளையும் வெளிப்படுத்தும் கவிதைகள் கொண்ட நூல்.

சோழ நிலா: சோழர்களின் வரலாற்றுப் புதினம்.

அவர்கள் வருகிறார்கள், மனச்சிறகு, நடந்த நாடகங்கள், வெளிச்சம் வெளியே இல்லை போன்றவை இவரது பிற புகழ்பெற்ற படைப்புகளாகும்.

திரைப்படப் பங்களிப்பு



திரைப்பட உலகிலும் தடம் பதித்த கவிஞர் மு. மேத்தா, பல வெற்றிப் படங்களுக்குப் பாடல்கள் எழுதியுள்ளார். "மரத்தை வச்சவன் தண்ணி ஊத்துவான்", "என் ராசாவின் ரோஜாவே" போன்ற உணர்ச்சிமிக்க பாடல்கள் மக்கள் மனதில் இன்றளவும் நீங்காத இடம் பிடித்துள்ளன. திரைத்துறையிலும் தனக்கென ஒரு தனித்துவமான முத்திரையைப் பதித்தார்.

விருதுகளும் அங்கீகாரங்களும்

தமிழ் மொழியிற்கும் புதுக்கவிதை வளர்ச்சிக்கும் கவிஞர் மு. மேத்தா ஆற்றிய மகத்தான சேவையைப் பாராட்டிப் பல்வேறு அமைப்புகளும் தமிழக அரசும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளன:

- சாகித்திய அகாதமி விருது
- தமிழக அரசின் கலைமாமணி விருது
- பாரதிதாசன் விருது
- கலைஞர் பொற்கிழி விருது

முடிவுரை

தமிழின் புதுக்கவிதை இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றியவர்களில் கவிஞர் மு. மேத்தாவின் பங்களிப்பு வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும். எளிய வார்த்தைகளில் ஆழமான கருத்துகளை உணர்த்தும் இவரது பாணி, இன்றும் பல இளம் கவிஞர்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்கிறது. புதுக்கவிதையின் வரலாற்றில் மு. மேத்தாவின் பெயர் என்றும் அழியாத சுடராய் ஒளிர்ந்துகொண்டிருக்கும்.



நாளை நமதே

உங்களால் முடியும் என்று
நீங்கள் நம்பினால்,
பாதியளவு வெற்றியை
அடைந்துவிட்டீர்கள் என்று
அர்த்தம்

அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com

அகமும் தமிழே



முதலும் தமிழே

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே தொலைத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலைலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு அகர முதல இலக்கியப் பேரவை
அகர முதல கல்விக்குழு சிவம் அறக்கட்டளை

தொடர்புக்கு :

9597887847
8870884969



அகர முதல இலக்கியப் பேரவை

Aagaramuthalaa www.aagaramuthala.com aagaramuthala@gmail.com